மாவட்ட / நீதிவான் நீதிமன்றம்,
முல்லைத்தீவு.

DISTRICT/MAGISTRATE'S COURT
MULLAITIVU.

CERTIFIED COPY
அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி

வழக்கு இலக்கம்:-
CASE NO:- 2/1/14

(1)

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில்

District & Magistrate's Court
08 FEB 2018
Mullaitivu

கௌரவ நீதிவான் ஜனாப் எம்.எஸ்.எம்.சம்சுதீன் அவர்கள் முன்பாக

வழக்கு இல: 21114

18.01.2018

1979ம் ஆண்டின் 7ம் இலக்க அரச காணிகள் (ஆட்சியை மீளப்பெறுதல்) சட்டம், 1981ம் ஆண்டின் 58ம் இலக்க 1983ம் ஆண்டின் 29ம் இலக்க அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) திருத்தச் சட்டங்களின் கீழான விண்ணப்பம்.

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
கரைதுறைப்பற்று.

*விண்ணப்பதாரி.*

-எதிர்-

திருமதி.சலீனா மேரியன் தேதுனு -டயஸ்,
கருநாட்டுகேணி,
கொக்கிளாய்,
முல்லைத்தீவு.

*பிரதிவாதி.*

## கட்டளை

இவ்வழக்கானது பிரதிவாதியான கருநாட்டுகேணி, கொக்கிளாய், முல்லைத்தீவினைச் சேர்ந்த சலீனா மேரியன் தேதுனு டயஸ் என்பவருக்கு எதிராக 1979ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் கீழ் 2017.02.15ம் திகதி இம்மன்றில் கோப்பிடப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விண்ணப்பத்தில் விண்ணப்பதாரி, தான் அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் நோக்கங்களுக்கான ஒரு தகுதிவாய்ந்த அதிகாரி எனவும், தனது அபிப்பிராயப்படி விண்ணப்பத்தின் அதன் இடாப்பில் விபரிக்கப்பட்டுள்ள காணி ஒரு அரசகாணி எனவும், குறித்த காணியை பிரதிவாதி அதிகாரமில்லாது உடைமை செய்து வருவதாகவும், குறித்த காணியிலிருந்து வெளியேறுமாறு பிரதிவாதிக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டதாகவும், பிரதிவாதி அதற்கு இணங்கியொழுக மறுத்துள்ளதாகவும், குறித்த காணியிலிருந்து பிரதிவாதியையும் அவரின் கீழ் தங்கியிருப்போர்களையும் வெளியேற்றித் தருமாறும் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பம் கோப்பிடப்பட்டதும், குறித்த காணியிலிருந்து பிரதிவாதியையும், அவரின் கீழ் தங்கியிருப்போரையும் ஏன் வெளியேற்றக் கூடாது என்பதற்கான காரணங்கள் ஏதுமிருப்பின் அவற்றைக் காண்பிக்குமாறு பிரதிவாதிக்கு மன்று அறிவித்தல் அனுப்பியது. அறிவித்தல் திரும்பும் தினமாக 2017.03.15ம் திகதி நியமிக்கப்பட்டிருந்தது. அறிவித்தலைப் பெற்றுக்கொண்ட பிரதிவாதி 2017.06.23ம் திகதி காரணம் காட்டும் விசாரணையில் வாய்மூலமான சாட்சியம் அளிக்கப்போவதில்லை எனவும், சத்திய ஓலை மூலமாகவும், ஆவணங்கள் மூலமாகவும் சாட்சியமளிக்கப்போவதாகக்கூறி சத்திய ஓலையையும் ஆவணங்களையும் காரணம் காட்டும் விசாரணையில் சமர்ப்பித்துள்ளார். பின்னர் இவ்வழக்கு விசாரணைக்காக நியமிக்கப்பட்டது.

விசாரணையின்போது 2017.08.22ம் திகதி முல்லைத்தீவு மாவட்ட வனப்பாதுகாப்புத் திணைக்கள உதவிப்பணிப்பாளரின் சாட்சியமும், குறுக்குவிசாரணையும், மீள்விசாரணையும் பதிவு செய்யப்பட்ட பின்னர் எழுத்துமூல சமர்ப்பணங்கள் சமர்ப்பித்துள்ளனர். பின்னர் இவ்வழக்கு இன்றையதினம் கட்டளைக்காக நியமிக்கப்பட்டது.

அரச காணிகள் உடைமை மீட்புச் சட்டத்தின் 9ஆவது பிரிவு பின்வருமாறு ஏற்பாடு செய்கின்றது.

"*அவ்வாறான விசாரணையில், 6ஆவது பிரிவின் கீழ் அழைப்பாணை விடுக்கப்பட்ட ஒரு நபர், ஒரு வலிதான அனுமதிப் பத்திரத்தின் மீது அல்லது ஏதாவது எழுதப்பட்ட சட்டத்திற்கேற்ப அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வேறு எழுத்திலான அதிகாரத்தின் மீது அக்காணியில் உடைமையில் உள்ளார் அல்லது இடங்கொள்கின்றார் எனவும், அவ்வாறான அனுமதிப்பத்திரம் அல்லது அதிகாரம் வலுவிலுள்ளது எனவும், கைவாங்கப்படவில்லை அல்லது வேறு விதத்தில் செல்லுபடியற்றதாக்கப்படவில்லை எனவும் நிறுவலாமே தவிர 5ஆம் பிரிவின் கீழான விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த விடயம் பற்றியும் வாதிடுவதற்கு உரித்துடையவரல்லர்*" என இப்பிரிவு ஏற்பாடு செய்கின்றது.

இந்த பிரிவின் ஏற்பாடுகளின்படி பிரதிவாதி தான் வலிதான **அனுமதிப்பத்திரத்தின்மீது** அல்லது ஏதாவது எழுதப்பட்ட சட்டத்திற்கேற்ப அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வேறு எழுத்தினாலான **அதிகாரத்தின்மீது** அக்காணியில் உடமையில் உள்ளார் அல்லது இடங்கொள்கின்றார் எனவும்,

அவ்வாறான அனுமதிப்பத்திரம் அல்லது அதிகாரம் வலுவிலுள்ளது எனவும், அது கைவாங்கப்படவில்லை அல்லது வேறு விதத்தில் செல்லுபடியற்றதாக்கப்படவில்லை என்பதையும் தவிர வேறு எதிர்வாதங்களை முன்வைப்பதற்கு உரித்துடையவரல்லா் என்பது தெளிவாகின்றது. இவ்வழக்கின் பிரதிவாதி தான் குறித்த காணியை அனுமதிப்பத்திரத்தின் மீது அல்லது ஏதாவது எழுதப்பட்ட சட்டத்திற்கேற்ப அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வேறு எழுத்தினாலான அதிகாரத்தின் மீது அக்காணியில் தான் உடைமை செய்வதாக கூறவில்லை. அவா் வேறு விதமான எதிர்வாதங்கள் சிலவற்றை மன்றின் முன்வைக்கின்றார். அரச காணிகள் ஆட்சி மீளப்பெறுதல் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி இந்த வாதங்களைக் கவனத்திற்கொள்வதிலிருந்து மன்று தடுக்கப்படுகின்றது. இருப்பினும் நீதியின் நலன்கருதி இந்த ஆட்சேபணைகளில் கூறப்பட்ட விடயங்கள் தொடா்பில் மன்று தனது கவனத்தைச் செலுத்துகின்றது. பிரதிவாதியால் முன்வைக்கப்பட்ட சான்றுகளிலும், ஆவணங்களிலும் மிகவும் நுணுக்கமாக மன்று தனது கவனத்தைச் செலுத்துகின்றது.

பிரதிவாதியால் தனது சத்திய ஓலையில் விண்ணப்பதாரரால் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட Quit Notice இன் புகைப்படப்பிரதியினை **'R1'** எனவும்,

பிரதிவாதியின் கணவா் இறந்துவிட்டதாகக் கூறப்படுகின்றதும், மீன்பிடி சம்பந்தமான தங்களது சொத்துக்கள் சுனாமியினால் அழிந்து விட்டதாகக் கூறப்படுகின்ற பத்திரிகையின் புகைப்படப்பிரதி **'R2'** எனவும்,

கடந்த சுனாமி அனர்த்தத்தின்போது சொத்துக்களை இழந்ததாக பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரதி 'R3' எனவும்,

பிரதிவாதியின் கணவரின் மரணப்பதிவுப் பத்திரத்தின் புகைப்படப்பிரதியை 'R4' எனவும், பிரதிவாதியின் திருமணப் பதிவுச்சான்றிதழின் புகைப்படப்பிரதியை 'R5' எனவும்,

கொக்கிளாயில் பிரதிவாதியின் மீன்பிடி மாதல்வராயப்பாடு உள்ளது எனவும், பிரதிவாதி மீன்பிடி மாதல்பாட்டுக்கு பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் என முல்லைத்தீவு மீன்பிடி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கரைவலை உத்தரவுப்பத்திரத்தின் புகைப்படப்பிரதியை 'R6' எனவும்,

குறித்த மீன்பிடி மாதல்வராயப்பாடு பிரதிவாதியின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் வர்த்தமானிப் பத்திரிகையின் புகைப்படப்பிரதியை 'R7' எனவும்,

முல்லைத்தீவு மீன்பிடித்துறை திணைக்களத்தினால் பிரதிவாதியின் மாதல்வராயப்பாடு சம்பந்தமாக உறுதிப்படுத்தப்பட்ட ஆவணத்தின் புகைப்படப்பிரதியை 'R8' எனவும்,

முல்லைத்தீவு கொக்கிளாயில் பிரதிவாதி தொழில் செய்து வருகின்றார் என்பதனை உறுதிப்படுத்தி குறித்த பகுதி கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட ஆவணத்தின் புகைப்படப்பிரதியை 'R9' எனவும்,

கொக்கிளாய் கரைவலைத் தொழிலுக்கு முல்லைத்தீவு பிரதேச சபையில் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை 'R10' எனவும் அடையாளமிட்டு அணைத்துள்ளார்.

பிரதிவாதியினால் சமர்ப்பிக்கப்பட்ட 'R1', 'R2', 'R3', 'R4', 'R5', 'R6', 'R7', 'R8', 'R9', 'R10' ஆகிய ஆவணங்கள் குறித்த காணிக்கு வலிதான அனுமதிப்பத்திரமாக/அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வேறு எழுத்திலான அதிகாரத்தின் மீதான ஆவணமாகக் கொள்ளமுடியாது:

பிரதேச செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட சத்திய ஓலை இனையும் ஏனைய ஆவணங்களிலும் முக்கிய குறைபாடு காணப்படுவதாகப் பிரதிவாதி எவ்விடத்திலும் ஆட்சேபனை செய்யவில்லை.

சம்பந்தப்பட்ட காணியில் பிரதிவாதி பல வருடங்களுக்கு மேலாக உடைமையில் இருப்பதாகவும் அதன் மூலம் அவர் அக்காணிக்கு சொந்தக்காரராகியுள்ளார் எனக்கூறும் பிரதிவாதி, குறித்த பகுதி பிரதேச செயலாளரால் பிரதிவாதிக்கு காணி வழங்கப்பட்டதாக எந்தவிதமான ஆவணங்களையும் மன்றில் சமர்ப்பிக்கத் தவறியுள்ளார்.

பிரதிவாதி தனது காரணம் காட்டும் விசாரணையில் பல வருட காலங்களாக இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட காணியில் தானும் தனது முன்னோர்களும் ஆட்சியிலிருந்து வந்ததாகக் கூறியுள்ளார். ஆனால் அரச

அவ்வாறு இந்தப் பொறுப்பு நிறைவேற்றப்படாவிடின், நீதிவானுக்குள்ள ஒரே தெரிவு அவரை வெளியேற்றுமாறு கட்டளை பிறப்பிப்பதாகும்" எனத் தீர்ப்பளித்துள்ளது. இதை அவர் ஆங்கிலத்தில்

*to "In an inquiry under the State lands (Recovery of possession) Act, the onus is on the person summoned to establish his possession or occupation that it is possessed or occupied upon a valid permit or other written authority of the State granted according to any written law. If this burden is not discharged, the only option open to the Magistrate is to order ejectment."*

இதன் காரணமாக இவ்வழக்கின் பிரதிவாதி இவ்வழக்குடன் தொடர்புபட்ட காணியிலிருந்து அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் 10(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி வெளியேற்றப்பட வேண்டியவராகின்றார்.

மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையில் இவ்வழக்கின் பிரதிவாதி இவ்விண்ணப்பத்தின் ஆதன இடாப்பில் விபரிக்கப்பட்டுள்ள காணியை வலிதான அனுமதிப்பத்திரத்தின்மீது அல்லது ஏதாவது எழுதப்பட்ட சட்டத்திற்கேற்ப அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வேறு எழுத்தினாலான அதிகாரத்தின்மீது அல்லாமல் விண்ணப்பத்தின் ஆதன இடாப்பில் கூறப்படும் (கீழ் வரும் ஆதன இடாப்பில்) காணியில் உடைமையில் உள்ளார் அல்லது இடங்கொள்கின்றார் என இம்மன்று முடிவு செய்து பிரதிவாதியையும் அவரின்கீழ்

காணிக்கு ஆட்சி உரிமை மூலம் உரிமை கோர முடியாது என பல சட்டங்களும் பல தீர்க்கப்பட்ட வழக்குகளும் காணப்படுகின்றன.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 161 ஆவது பிரிவு போன்ற ஏற்பாடுகள் அரச காணியை ஆட்சியுரிமை மூலம் உரிமை கொள்ள முடியாது எனக் கூறுகின்றது.

Lebbe Vs. Umma (1999) 3 SLR 367. என்ற வழக்கில் அரசகாணியை ஆட்சியுரிமை மூலம் சொந்தம் கொள்ள முடியாது என நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் தீர்ப்பளித்துள்ளார்.

இந்தக் காரணங்களினால் பிரதிவாதியால் முன்வைக்கப்பட்ட எதிர்வாதமான பல வருட உடைமையின் மூலம் தான் குறிப்பிட்ட காணியின் சொந்தக்காரராகியுள்ளார் என்ற எதிர்வாதம் இம்மன்றினால் நிராகரிக்கப்படுகின்றது.

Muhandiram Vs. Chairman, Jantha Estate Development Board. (1992) 1 SLR 110. என்ற வழக்கில் நீதியரசர் Grero. J.

*"அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் கீழான விசாரணை ஒன்றில் தான் ஒரு வலிதான அனுமதிப்பத்திரத்தின்மீது அல்லது ஏதாவது எழுதப்பட்ட சட்டத்திற்கேற்ப அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வேறு எழுத்திலான அதிகாரத்தின்மீது அக்காணியில் உடைமையில் உள்ளார் அல்லது இடங்கொள்கின்றார் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு அழைப்பாணை விடுக்கப்பட்ட நபரின் மீது சுமத்தப்பட்டுள்ளது.*

தங்கியுள்ளோர் எவரும் விண்ணப்பத்தின் ஆதன இடாப்பில் கூறப்படும் (கீழ் வரும் ஆதன இடாப்பில்) காணியில் இருப்பின் அவர்களையும் குறிப்பிட்ட காணியிலிருந்து உடனடியாக வெளியேற்றுமாறு இம்மன்று இத்தால் கட்டளையிடுகின்றது.

## ஆதன இடாப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளதும், கருநாட்டுக்கேணி கிராம அலுவலர் பிரிவில் உள்ளதும், நில அளவைப்படத்தில் 01 ஏக்கர் 00 றூட் 00 பேர்ச் 00 ஹெக்டேயர் விஸ்தீரணமுடைய கீழ் காணும் எல்லைகளைக் கொண்ட அரச காணித்துண்டு ஒன்று.

**இதன் எல்லைகள்,**

வடக்கு : அரச காணி.

கிழக்கு : கடல்.

தெற்கு : அரச காணி.

மேற்கு : குள ஒதுக்கீடு.

(எம்.எஸ்.எம்.சம்சுதீன்)
நீதிவான் நீதிமன்றம்,
முல்லைத்தீவு.
18.01.2018.

திகதி 2018/02/
இது முல்லைத்தீவு மாவட்ட / நீதவான் / ஆரம்ப நீதிமன்ற 21114 ம் இலக்க வழக்கின் 18/01/2018 அன்று
கட்டளையின்
உண்மைப்பிரதியென உறுதிப்படுத்துகின்றேன்.
தயாரித்தவர் V. [signature]
சரிபார்த்தவர் A. Megatup
பதிவாளர் [signature]
REGISTRAR
DISTRICT & MAGISTRATE'S COURT

1. Protectedarea -;
2. Mahaweli had no othrity to give for fishing
3. Permenent structurion.
4.